முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 18.11.2025

O.S No. 364/2011.

வா.சா.1- தர்ஷினி வேணுகோபால்

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

பட்டிகை சொத்தில் 1 சென்ட்ற்கு 1 இலட்சத்திற்கும் மேல் மதிப்பு வரும் என்றால் எனக்கு தெரியாது. இந்த சொத்து மதிப்பை மிகவும் குறைவாக மதிப்பீடு செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கானது மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய வழக்கு என்றாலும் இந்த நீதிமன்றத்திற்கு பணம் வரையறை இல்லை என்றாலும் சரியல்ல.

வழக்கு சொத்திற்கான சந்தை மதிப்பு பதிவேட்டை நான் எடுத்து பார்த்துள்ளேனா என்றால் இல்லை. சந்தை மதிப்பு பதிவேட்டின் படி 1 சென்டானது ரூ, 1 ,08,564 என்றால் எனக்கு தெரியாது. தவறான மதிப்பை குறிபிட்டு இந்த வழக்க்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் 1 வது பிரதிவாதி 01.01.1991 ல் 22.526 சென்ட் நிலத்தை கைவசப்படுத்தி காம்பவுண்ட் சுவர் அமைத்து, கட்டிடம் கட்டியும் எனக்கும் மற்ற அனைவருக்கும் தெரிந்தே தொடர்ச்சியாகவும் இடையூறு இன்றியும் அமைதியான முறையிலும் முழுமையான கைவசம் அமைத்து வருகிறார் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகள் 01.01.2003 லே வழக்கு சொத்திலுள்ள 22.526 நிலம் எதிரிடை அனுபவத்தின் மூலம் உரிமைப்பட்டு பிரதிவாதிகள் அனுபவித்துவருகிறார் என்றால் சரியல்ல. 2011 ல் 1 ம் பிரதிவாதி சட்டத்திற்கு புறம்பான முறையில் வழக்கு சொத்தை ஆக்கிரமித்துள்ளார். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வரை பிரதிவாதிகள் மீது நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் 2004 ல் 1 ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு நடவடிக்கையை எதிர்த்து மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்தேன். அவரது

நடபவடிக்கையின் பேரில் 1 ம் பிரதிவாதி வழக்கு சொத்திலிருந்து நீக்கிரவு செய்யப்பட்டார். மேற்படி புகாருக்கு எந்த ஆவணத்தையாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

உண்மையில் நான் சொல்வது போல் புகார் கொடுக்கப்படவில்லை என்றாலும் 1 ம் பிரதியை காலி செய்யப்படவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் அனுபவித்து வரும் 22.526 சென்ட் நிலத்திற்கு எனக்கு எந்த வித உரிமை இல்லை என்றாலும் பிரதிவாதிகளே அதன் உரிமையாளர்கள் என்றாலும் சரியல்ல.

தவறான தகவலை குறிப்பிட்டு எனது முதல் விசாரணை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 22.526 சென்ட் நிலத்தை குறித்து எனது வழக்கானது தள்ளுபடி செய்யத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.